கோகுலம்

குழந்தைகள் மாதமிருமுறை

1-6-1972

30 காசு





PRATIBHA-70-4 TAM

இந்திய உதவி காப்டன் வெங்கட்ராகவன் பிலிப்ஸ் சைக்கிள் உதவியினால் உடல் வளத்தை தெம்புடன் வைத்திருக்கிறார்


இந்தியாவின் சிறந்த விளையாட்டு வீரர் வெங்கட் தினமும் சைக்கிள் சவாரி செய்வதன் அவசியத்தை உணர்ந்திருக்கிறார் — அதுவும் குறிப்பாக விளையாட்டுப் போட்டிகள் இல்லாத காலங்களில் இதன்மூலம் அவரால் எப்பொழுதும் தெம்புடன் செயலாற்ற முடிகிறது. உலகப் புகழ்வாய்ந்த பிலிப்ஸ் ஊக்க மிகு வாலிபர்களுக்கு உகந்தது. கவர்ச்சியானது. அனாயாசமாக சவாரிசெய்ய வல்லது.

அதில்தான் எத்தனை வகை! ஒவ்வொரு இளைஞரின் விருப்பத்துக்கும் ஏற்றவாறு ஒவ்வொருவகை பிலிப்ஸ்!

பிலிப்ஸ் ஒலிம்பியா (சுபர்ப் மாடல்)
பிலிப்ஸ் நியூயார்க்கர் (ஸ்போர்ட்ஸ் மாடல்)
பிலிப்ஸ் லேடீஸ் மாடல்
பிலிப்ஸ் கான்கரர் (ஜூனியர் மாடல்)

ஊக்கமிகு வாலிபர்கள் உவந்து வாங்குவது பிலிப்ஸ்





இந்தியாவில் தயாரிப்போர்:
டிஐ சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா
அம்பத்தூர், சென்னை-53

உரிமையாளர்கள்:
டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
ஆஃப் இந்தியா லிமிடெட் சென்னை-1
பதிவுபெற்ற உபயோகிப்போர்.

TIC/PH/6796





கோகுலம்

பரிதாபி, வைகாசி 19

ஜூன் 1, 1972

மலர் 1 :: இதழ் 4

சந்தா விவரம்:

தனிப் பிரதி விலை 30 காசு
ஒரு வருடம் ரூ. 7-00
ஆறு மாதம் ரூ. 3-50
இலங்கை ரூ. 9-00 (இலங்கை நாணயப்படி)
இதர நாடுகள் ரூ. 18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)

அட்டைப்பட பிரேக் மாஸ்டர்:

பசங்கன்னு போட்டோவா?
என் குழந்தையின் போட்டோவையும்
அட்டையில் போடுங்களேன்!

வண்ணப்படம்: வி. ரகுநாத்



உயிர்களிடத்து
அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேண்டும்
- பாரதியார்



கண்ணன் கனியமுதம்



திருமுருக கிருபானந்தவாரியார்

நாரதர் கலகமன்று

ஒரு பட்டிக்காட்டான். ஒரு கட்டடத்துக்கு முன்னே நின்று, ''ஐயோ, கொலை, கொலை!'' என்று கத்தினான்.

காவல் துறையினர் ஓடி வந்தார்கள். உள்ளே நுழைந்தார்கள். கத்தியிருந்தது; இரத்தம் இருந்தது; அது கொலையன்று. மருத்துவர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருந்தார்.

இதுபோல் நாரத முனிவர் செய்தது அறுவைச் சிகிச்சை ; கலகமன்று.

பிரமதேவருடைய சபையில் ஆறு கந்தர்வர்கள். 'பிரமதேவர் தாம் படைத்த கலைமகளைத் தாமே விரும்பினரே' என்று பரிகசித்தார்கள். பிரமதேவர் வெகுண்டு, ''மண்ணிடை மனிதப் பிறப்பு எடுக்க'' என்று சபித்தார். அவர்கள் வணங்கி, ''மன்னிக்க வேண்டும்'' என்று வேண்டினார்கள்.

பிரமதேவர் மனங் கனிந்து ''பிறந்தவுடனே அப்பிறப்பு நீங்கி உங்கள் பதம் பெறுவீர்கள்'' என்று கூறிக் கருணை புரிந்தார். அந்த ஆறு கந்தர்வர்கள் வசுதேவருடைய மக்களாகப் பிறந்து சாபம் நீங்கித் தம் பதம் பெற்றார்கள்.

கம்சனுடைய கொடுமை

காலநேமி என்ற அரக்கனே கம்சன் ஆதரவினால் இரக்கமின்றி வசுதேவரையும் தேவகியையும் சிறையில் வைத்தான். தன்னைக் கண்டித்த தந்தை உக்கிரசேனனையும் தாயையுமே சிறையில் வைத்துக் கொடுமைப்படுத்தினான்.

தன்னைக் கொல்லப் பிறக்கும் திருமாலுக்கு உகந்த வேத வேதியர்களையும் பக்த ஜனங்களையும் பிடித்து அடித்தான். எங்கும் கம்சனுடைய அக்கிரமங்கள் எரிமலை போல் கனல் வீசியது. சாதுக்கள் கண்ணீர் வடித்தார்கள்.

தேவகி ஏழாவதாகக் கருக் கொண்டாள். திருமாலின் கட்டளையின்படி அநந்தராகிய ஆதிசேஷனார் கருவில் வந்து தங்கினார். அக்கரு ஐந்து மாதங்கள் வளர்ந்தபின், கம்சனுடைய இடரில் இருந்து விலக்குமாறு அக்கருவை ஆயர்பாடியில் நந்தகோபனுடைய பொன் மாளிகையில் இருந்த தம் பெரியன்னை உரோகணியின் கருவில் மாற்றினார். உரோகணி கருவில் இருந்து பலராமர் பிறந்தார்.

இவர் வலிமையில் சிறந்தவர் ஆகவின் பலபத்திரன் என்றும், அழகில்





மிக்கவர் ஆதலின் இராமன் என்றும், கருவை அபகரிக்கப் பிறந்தவராதலின் சங்கர்ஷணர் என்றும் பேர் பெற்றார்.

விஷ்ணு தம் யோகமாயையைப் பார்த்து, 'நீ சென்று கோகுலத்தில் யசோதையின் வயிற்றில் பிறந்து உன் மாயையால் மயக்கஞ் செய்' என்று ஆணையிட்டார். விஷ்ணு மாயை யசோதை வயிற்றில் வந்து கருவுற்றது.

எல்லாமாய் எங்குமாய் நிறைந்த மகாவிஷ்ணுவின் அம்சம் சிறையில் இருந்த தேவகியின் வயிற்றில் வந்து தங்கியது. அவள் உடம்பெல்லாம் ஒளி வீசியது. முகம் முழு நிலாவைப் போல் ஒளி செய்தது. அதை அறிந்த கம்சன், சிறையிலே தேவகியைத் தனிக் காவலிலும், வசுதேவரைத் தனிக் காவலிலும் கால்களில் விலங்கு பூட்டி மிக எச்சரிக்கையாக வைத்தான்.

ஆவணி மாதம் தேய்பிறையில் அஷ்டமி திதியிலே, உரோகணி நட்சத்திரத்தில் சிறைச்சாலையில் எம்பெருமான் கோடி சூர்யப் பிரகாசமாய் சதுர்ப்புஜத்துடன் பஞ்சாயுதபாணியாகத் திரு அவதாரம் செய்தருளினார்.

கண்ணன் திரு அவதாரம்

மா தவத்தின் மணி விளக்காம் தேவகியின் மணி வயிற்றில் கண்ணபிரான் அவதரித்தபோது வானோர்கள் மலர் மழை பொழிந்தார்கள். விண்ணில் தேவ துந்துபி முழங்கியது.

பிரமாதி தேவர்கள் சிரங்களின் மீது கரங்களைக் கூப்பி, ''பூபாரந் தீர்க்க வந்த புண்ணிய மூர்த்தியே! வைகுந்த வாசகனே! மலர்மகள் நேசனே! அரவணைச் செல்வனே! அறிதுயில் புரியும் அண்ணலே!'' என்று உள்ளம் குழைந்து துதி செய்தார்கள்.

நீலமேக வண்ணமும், பஞ்சாயுதமும் நான்கு தோள்களும் உடையவராய் அவதரித்த எம்பெருமானைப் பார்த்து வசுதேவரும் தேவகியும் அளக்கவொண்ணாத ஆர்வத்துடன் பலமுறை பணிந்தார்கள். பவப் பிணி தணிந்தார்கள். ஐயன் அடி மலரை முடியில் அணிந்தார்கள்.

''உலகம் உய்ய அவதரித்த தெய்வ நாயகா! கருணையே இல்லாத கம்சனுடைய கொடுமையிலிருந்து உன்னை எவ்வாறு காப்பாற்றுவோம்?'' என்று கூறி அழுது தொழுதார்கள்.

பகவான், ''வசுதேவரே! நீங்கள் வருந்த வேண்டாம். ஆயர்பாடியில் நந்தகோபாலன் மனைவியும், மாதவம் செய்தவளும் ஆகிய யசோதை வயிற்றில் மாயை பிறப்பாள். நீங்கள் என்னைத் தொட்டவுடனே என் தேவ சரீரம் மறையும். மனித உடம்பு வந்துவிடும். ஒருவரும் அறியாத வண்ணம் என்னைக் கொண்டுபோய் யசோதையிடம் வைத்துவிட்டு, அங்கு பிறந்திருக்கின்ற என் தங்கை யோக மாயையைக் கொணர்ந்து இங்கே சேர்ப்பீர்களாக. வெகு விரைவில் தீயவர்கள் மாள்வார்கள். தூயவர்கள் ஆள்வார்கள்.

''வசுதேவரே! நீரும் அன்னையாகிய தேவகியும் முற்பிறப்பில் சுவாயம்பு மன்வந்தரத்தில் என்னை நோக்கித் தேவ வருஷம் 12000 ஆண்டுகள் மாதவஞ் செய்தீர்கள். அத்தவத்தின் பயனாக நான் உங்களுக்கு இப்போது மகனாக வந்து அவதரித்திருக்கிறேன். உங்கள் தவம் மேரு மலையினும் மேம்பட்டது'' என்று கூறி அருள் புரிந்தார்.

வசுதேவரும் தேவகியும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பகவான் சின்னஞ்சிறு குழந்தையாக ஆனார். (தொடரும்)



தெரியுமா?

41. மனிதக் குரங்குகளில் மிகப் பெரியது எது?

42. ஐரோப்பாவின் மிகச் சிறிய மானின் பெயர் என்ன?

43. கிரீஸ் நாட்டின் மிக உயரமான மலை எது?

44. ரோமானியச் சக்கரவர்த்திகளில் முதன் முதலில் கிறிஸ்துவ மதத்துக்கு மாறியவர் யார்?

45. தாவரங்களின் பச்சை நிறத்துக்குக் காரணமான ரசாயனப் பொருளின் பெயர் என்ன?

46. பொமரேனியன் என்பது என்ன?

47. அழகிற்காக வணங்கப்படும் கிரேக்க தெய்வத்தின் பெயர் தெரியுமா?

48. லண்டனுக்கும் பாரிஸுக்கும் இடையே ஓடுகிறது ஒரு ரயில் வண்டி. அது புகழ் பெற்றது. அதன் பெயர் என்ன?

49. இங்கிலாந்தின் தோட்டம் என்று எதற்குப் பெயர்?

50. பிராணிகளில் அதி வேகமாக ஓடக் கூடியது எது?

51. பெனிஸிலினைக் கண்டுபிடித்தது யார்?

52. 'மோஹார்' என்றால் என்ன? அது எதிலிருந்து கிடைக்கிறது?

53. ஐக்கிய அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி யார் என்று தெரியுமா?

54. பிரபலமான அமெரிக்க சுதந்திர தேவியின் சிலையை அமெரிக்காவுக்கு அளித்தது எந்த நாடு?

55. பிரிட்டனின் கடலில் அகப்படும் ஒருவகை மீனை அரண்மனைக்கு அனுப்பி வைக்கிறார்கள். அத்தனை பிரபலமான மீன் எது?

56. ஐக்கிய அரபுக் குடியரசு (UAR) எந்த இரண்டு நாடுகளை இணைத்து ஏற்படுத்தப்பட்டது?

57. தங்கக் கொம்பு (Golden Horn) எங்கே இருக்கிறது?

58. எந்த நாட்டில் 'டிம்பக்டு' உள்ளது?

59. இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமானது எந்த வருஷத்தில்?

60. வாட்டர்லூ சண்டை நடந்தது எந்த ஆண்டு?

61. அமெரிக்கா சுதந்திரப் பிரகடனம் செய்தது எந்த வருஷம்?

62. 'மாக்னா கார்டா' என்ற புகழ் பெற்ற சமாதான ஒப்பந்தம் கையெழுத்திட்டது எப்போது?

63. 'லண்டன் பெருந் தீ' விபத்து எந்த ஆண்டில் ஏற்பட்டது?

64. உலகில் மிக மிக அதிகமான ஜனத்தொகை எந்த நாட்டில்?

65. இராட்சை மதுவான ஒயினுக்கு ஒரு கடவுள் இருக்கிறார் மேல் நாட்டில். அது யார் தெரியுமா?

66. மேலை நாட்டில் சூரியக் கடவுளுக்கு என்ன பெயர்?

67. வெண்கலம் தயாரிக்கத் 'தகரம்' என்ற உலோகத்தோடு இன்னொர் உலோகம் கலக்கப்படுகிறது. அது என்ன உலோகம்?

68. 'டைனமைட்'டைக் கண்டுபிடித்தது யார்?

69. வடக்கு அயர்லாந்தின் தலைநகரம் எது?

70. உலகின் மிக உயரமான மலை எவரெஸ்ட். அடுத்து உயரமான மலை எங்குள்ளது? பெயர் என்ன?

விடைகள்: 41. கொரில்லா 42. ரோபக் Roebuck 43. ஒலிம்பஸ் 44. கான்ஸ்டான்டைன் 45. க்ளோரோபில் 46. ஒருவகை நாய் 47. அப்ரோடைட் Aphrodite 48. கோல்டன் ஆரோ 49. கென்ட் 50. வேங்கை (சிட்டா) 51. அலெக்ஸாண்டர் ப்ளெமிங் 52. மிக நேர்த்தியான கம்பளி ஆடை, அங்கோரா ஆட்டின் ரோமம் 53. ஜார்ஜ் வாஷிங்டன் 54. பிரான்ஸ் 55. ஸ்டர்ஜன் Sturgeon 56. எகிப்து, சிரியா 57. இஸ்தான்புல் நகரில் 58. மாலி குடியரசில் Republic of Mali 59. 1939ல் 60. 1815ம் ஆண்டில் 61. 1776ல் 62. 1215ல் 63. 1666ம் ஆண்டு 64. சீனாவில் 65. பாக்கஸ் Bacchus 66. அப்போலோ 67. தாமிரம் 68. ஆல்பிரெட் நோபெல் 69. பெல்பாஸ்ட் 70. எவரெஸ்டுக்கு அடுத்த உயரமான மலை காரகோரம் மலைத்தொடரில் உள்ளது பெயர் K2.



ஒப்புர வொழுகு

ஒப்புரவு : மக்கட் சமூகத்தின் நடைக்கு உட்படுதல்.

உலக நடைக்கு உட்பட்டு நடப்பாயாக. உலக நடையென்ருல் உலகத்தில் அறிவுடையோர் நடக்கும் முறை.

ஓதுவதொழியேல்

ஓதுவது : நூல்களைப் படிப்பதை - **ஒழியேல் :** வயது ஆயிற்று என்ருவது, எல்லாம் அறிந்து கொண்டேன் என்ருவது விட்டு விடாதே.

ஔவியம் பேசேல்

ஔவியம் : பொருமை.

பொருமை கொண்டு அதனுல் உண்டாகும் பேச்சைப் பேசாதே. பிறருடைய சுகம், செல்வம், அழகு, கல்வி இவைகளைக் கண்டு பொறுக்காமல், அவை குறைய வேண்டும் என்று தோன்றும் தீய விருப்பத்துக்குப் பொருமை, அல்லது அழுக்காறு, ஔவியம் என்று பெயர். இந்த எண்ணங்களினுல் ஒருவன் தனக்குத் தானே வருத்தம் உண்டாக்கிக்கொள்கிருன். பேச்சு எண்ணங்களால் உண்டாகும். பேசப் பேச எண்ணங்களும் வளரும். பேசாதிருப்பது எண்ணங்களை அடக்குவதற்கு ஒரு வழி. பேசுவதால் பிறருக்கும் அவ்வெண்ணங்கள் உண்டாகும் அல்லது கேட்போர் உன்னை இகழ்வார்கள்.

அஃகஞ் சுருக்கேல்

அளக்கும்போது சுருக்கி அளக்காதே.

அஃகம் : தானியம் - **சுருக்கேல் :** விற்கும்போதும் ஆட்களுக்குப் படியளக்கும்போதும் குறைத்துக் கொடுக்காதே.

சுருக்கிக் கொடுத்தால் அது திருட்டாகும். வியாபாரம் செய்வோருக்கு இது முக்கிய தருமம். ஊரில் அன்று வழங்கும் அகவிலைக்கு வித்தியாசப்படாமலும் அளந்து கொடுப்பதில் குறைக்காமலும் (குழந்தைகள் முதலிய அறியாதவர்கள் பண்டம் வாங்கினுலும்) கொடுப்பதுதான் வியாபாரிகளின் கடமை. இது செய்தால்தான் அவர்கள் வியாபாரமும் செழிக்கும்; ஊருக்கும் க்ஷேமம்.

ராஜாஜி

தேசதேசக் கதைகள் – 2

மூன்று கனவுகள்

வாண்டுமாமா



நீண்ட நெடுங் காலத்துக்கு முன்னாலே ஒரு ராஜா இருந்தார். அவர் ரொம்ப நல்லவர். குடிமக்கள் அவரை மிகவும் நேசித்தார்கள். ஜனங்களின் சுகத்தையே குறியாகக் கொண்டு பல காலம் அரசாண்டு வந்தார் மன்னர்.

ஒரு நாள் இரவு மன்னர் ஒரு கனவு கண்டார். விநோதமான கனவு. தம் படுக்கைக்கு மேலாக ஒரு நரி தலை கீழாக வால் மேலாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. கனவுதானென்றாலும் மன்னருக்கு இது வேதனையைக் கொடுத்தது. கனவின் பொருளை யாராலும் விவரித்துக் கூற முடியவில்லை. தம் நாட்டிலுள்ள எல்லாருக்கும் அழைப்பு விடுத்தார், தமக்குக் குழப்பத்தை உண்டாக்கிய கனவின் பொருளைக் கூறக் கூடியவர் யாரானாலும் தம்மிடம் வரலாம் என்று.

மன்னரின் குடி மக்களில் ஓர் ஏழைக் குடியானவன் இருந்தான். 'முயன்று தான் பார்க்கலாமே? பரிசு கிடைத்தால் வாழ்வு வளம் பெறும்' என்ற எண்ணத்துடன் தலைநகரை நோக்கிச் செல்லலானான். இரு பக்கமும் நெடிதுயர்ந்த குறுகலான வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. அதன் வழியே போகும் போது ஒரு பாம்பு எதிர்ப்பட்டது. நல்ல பெரிய கம்பீரமான பாம்பு. ''நண்பனே! வணக்கம். எங்கே போகிறாய் ?'' என்று கேட்டது பாம்பு.

குடியானவன் அரசரின் கனவைப் பற்றிக் கூறி அவரது அறிவிப்பையும் தெரிவித்தான். அதைக் கேட்ட பாம்பு, ''தைரியமாகப் போய் வா. மன்னர் உனக்குத் தரும் பரிசை என்னோடு பகிர்ந்து கொள்ளுவதாக வாக்களித்தாயானால் நான் கனவின் பொருளை உனக்குச் சொல்லுகிறேன்'' என்றது.

குடியானவன் மறுப்பானா? உடனே சம்மதித்தான் மகிழ்ச்சியோடு. பாம்பு கூறி

யது: ''நாட்டில் தந்திரசாலிகளும், பொய்யர்களும், ஏமாற்றுக்காரர்களும் நிறைந்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது நரியின் தலைசீழ்த் தோற்றம்.''

குடியானவன் மன்னரிடம் வந்தான். பாம்பு கூறியதை அப்படியே கூறினான். மன்னர் மகிழ்ந்து ஏராளமான பரிசுகளை வழங்கினார். பரிசுகளைப் பெற்றுக் கொண்ட குடியானவனுக்கு அதைப் பாம்புடன் பங்கு போட்டுக் கொள்ள மனமில்லை. ஆகவே, கொடுத்த வாக்கை மதிக்காமல் வேறு வழியாகத் தன் கிராமத்துக்குப் போய்விட்டான்.

மன்னர் கனவின் பலனை அறிந்ததும் பொய்யர்களையும் ஏமாற்றுக்காரர்களையும் பகுத்தறிந்து ஒழித்துக் கட்டினார்.

கொஞ்ச காலம் ஆயிற்று. மன்னர் மறுபடியும் ஒரு கனவு கண்டார். இந்தத் தடவை அவரது படுக்கைக்கு மேலே உருவிய வாள் ஒன்று, கூரிய முனை அவரது இதயத்தை நோக்கிய நிலையில், தொங்கிக் கொண்டிருந்தது. அவரது அவையிலுள்ள மந்திரி பிரதானிகள் யாராலும் அந்தக் கனவின் பொருளை விளக்க முடியவில்லை. ஆகவே மன்னர் தம் ஆட்களை அனுப்பி அந்தக் குடியானவனைத் தம் முன் வந்து ஆஜராகும்படி கட்டளையிட்டார்.

குடியானவனின் நிலைமை சங்கடமாகப் போயிற்று. முதல் தடவை அவனுக்கவா கனவுக்குப் பலன் சொன்னான்? உதவிய பாம்புக்கு அவன் உரியதைக் கொடுக்காமல் ஏமாற்றி விட்டானே. இப்போது எப்படி அதனிடம் போவது? ஆனால் வேறு வழியும் கிடையாதே. ஆகவே, பழைய பாறைப் பாதை வழியே நடந்தான். முதல் தடவை எங்கு அந்தப் பாம்பைச் சந்தித்தானோ அதே இடத்துக்கு வந்ததும், ''பாம்பே, பாம்பே! தயவுசெய்து வா. உன் உதவியை நாடி மறுபடியும் வந்திருக்கிறேன்'' என்று கத்தினான்.

வெகு நேரம் அவன் கெஞ்சிக் கதறிய பிறகு பாம்பு தோன்றியது. அவன் தன்னை ஏமாற்றியதைப் பற்றி அது எதுவும் கேட்கவில்லை. மன்னர் கண்ட கனவைக் குடியானவன் விளக்கினான். கிடைப்பதில் பாதியைத் தருவதாக வாக்களித்தான். அதன் பிறகு பாம்பு கூறியது: ''மன்னரிடம் போ. உருவிய வாள் போரின் அறிகுறி என்று சொல். விரோதிகள் நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டைக் காட்டிக்





அம்மா: திடீரென்று குழந்தையைக் காரணமில்லாமல் ஏன் இப்படி அடிக்கிறீர்கள்?

அப்பா: நாளைக்கு அவனுடைய பிராகரஸ் ரிபோர்ட் வரப் போகிறது. நான் ஊரில் இருக்க மாட்டேன்!



கொடுக்கும் துரோகிகள் உள்நாட்டிலேயே இருக்கிறார்கள். ஆகவே போரிடத் தயாராகச் சொல்.''

குடியானவனின் விளக்கத்தைக் கேட்ட மன்னர் அவனுக்கு முன்னைவிட அதிகமான வெகுமதிகளை வழங்கினார். நாட்டைக் காப்பதில் எச்சரிக்கையானார். குடியானவன் பரிசுப் பொருளுடன் மலைப் பாதை வழியாகவே கிராமத்துக்குத் திரும்பினான். பாம்பு அவனுக்காகவே காத்திருந்தது. ''வாக்களித்தபடி பரிசில் பாதியைக் கொடு'' என்று கேட்டது.

''பாதியா? முடியவே முடியாது. பணமாவது காசாவது! கருங்கல் துண்டும் ஒரு கொள்ளிக் கட்டையும்தான் உனக்கு நான் தரப் போகும் பங்கு'' என்று கூறியபடி தன் வாளை உருவிப் பாம்பை வெட்டப் பாய்ந்தான். ஆனால் பாம்பு வெகு வேகமாக ஒரு பாறையின் இடுக்கில் புகுந்து விட்டது. ஆனாலும் குடியானவனுடைய வாள் அதன் வாலின் நுனியைத் துண்டாடி விட்டது.

சில காலம் சென்றது. 'மன்னரின் கனவில் மறுபடியும் ஒரு காட்சி தோன்றியது. ஓர் ஆடு மன்னரின் அறையில் படுக்கை மேலாகத் தொங்கியது. அமைதியாக எவ்வித பீதியுமின்றி ஆடு மகிழ்ச்சியாகவே காணப்பட்டது. ஆனால் அது ஏன் அப்படி அந்தரத்தில் தொங்க வேண்டும்? மன்னருக்கு இந்தக் கனவின் உண்மையை விளக்குபவர் யாருமில்லை. மறுபடியும் குடியானவனின் பாடு ரொம்பத் திண்டாட்டமாகியது. 'என்னால் எப்படி மன்னரின் கனவுக்கு விளக்கம் கூற முடியும்? மறுபடியும் பாம்பிடம் எப்படி நான் உதவியை நாடிப் போவேன்? அதை ஏமாற்றி அதன் வாலைத் துண்டித்து எத்தனை கேவலமாக நடந்து கொண்டேன்?' என்று மனம் நொந்து போனான். 'என்ன ஆனாலும் சரி மறுபடியும் பாம்பின் உதவியைத்தான் தேடி ஓட வேண்டும்' என்று மலைப் பாதை வழியே வந்தான் குடியானவன். முன்பு கூப்பிட்டமாதிரியே உள்ளம் உருக வேண்டிக் கொண்டு கூப்பிட்டான்.

''என்னைக் கைவிட்டு விடாதே. உன் உதவி இல்லாமல் என்னால் மன்னரின் முன்னே போக முடியாது'' என்று கெஞ்சினான்.

கடைசியாகப் பாம்பு வந்தது. முன்பு நடந்தவைகளையெல்லாம் மறந்ததாகப் பாம்பு கூறி, முன் போலவே கிடைக்கும் பரிசில் பாதியைத் தர வேண்டும் என்று

ஒப்பந்தம் பேசிக் கொண்டு கனவின் பலனைக் கூறியது. ''இதன் அடையாளம் மன்னரின் ராஜ்யத்தில் சமாதானம் நிலவுகிறது. ஜனங்களெல்லாம் அந்த ஆட்டைப் போலச் சந்தோஷமாக அமைதியான வாழ்வு நடத்துகிறார்கள் என்று பொருள்.''

மகிழ்ச்சியோடு மன்னரிடம் போய் இதைக் கூறியதும் மன்னர் குடியானவனுக்கு முன் எப்போதையும்விட அதிகமான உயர்ந்த பரிசுகளைக் கொடுத்து அனுப்பினார். ஏராளமான செல்வத்துடன் அவன் மலைப் பாதைக்கு வந்தான். அங்கு அவனுக்காகவே காத்திருந்தது அந்தப் பாம்பு. பாம்பைக் கண்டதும் குடியானவன் அத்தனை நிதியையும் அதன் முன் வைத்தான். ''நீ பொறுமையின் அவதாரம். ஏமாற்றிய என்னை மன்னித்தாய். வாக்குத் தவறியதற்காகவும், உன் வாலை வெட்டியதற்காகவும் என்னை மன்னித்து விடு. இதோ இந்தச் செல்வமனைத்தையும் நீயே எடுத்துக் கொள்'' என்றான்.

''நடந்ததை எண்ணி வேதனைப் படாதே. நீ அப்படி நடந்து கொண்டது உன் தவறல்ல. அது சூழ்நிலையின் கோலம். முதல் கனவின்படி மக்கள் எல்லாரும் நரியைப் போல் தந்திரசாலிகளாகவும், பொய்யர்களாகவும், ஏமாற்றுபவர்களாகவும் இருந்தார்கள். அவர்களில் ஒருவன்தானே நீயும்? அந்தக் குணம் உன்னை விட்டு எப்படிப் போகும்? ஆகவே நீ என்னை ஏமாற்றி விட்டு வேறு வழியாக உன் வீட்டுக்குப் போய் விட்டாய்.

''இரண்டாவது கனவின்படி யுத்த காலத்தில் வாள் தலைக்கு மேலே தொங்கியது. அதாவது நாட்டை யுத்த அபாயமும் துரோகமும் சூழ்ந்து கொண்டிருந்தன. ஆகவே நீயும் உன் வாளை உருவி என் வாலை வெட்டினாய். ஆனால் இப்போதோ நாட்டில் சமாதானமும் சுபிட்சமும் நிலவுகிறது. மக்களெல்லாம் அந்த ஆட்டைப் போலவே குற்றமற்றவர்களாக, சாதுக்களாக இருக்கிறார்கள். நீயும் உன் உள்ளத்தில் அன்பும் இரக்கமும் நிரம்பியவனாக என்னிடம் வந்திருக்கிறாய். ஆகவே, நண்பனே! ஆண்டவனின் ஆசீர்வாதம் உனக்குக் கிடைக்கட்டும். எனக்கு எவ்விதப் பரிசும் வேண்டாம். எல்லாவற்றையும் நீயே எடுத்துச் செல்'' என்று கூறியபடியே அந்தத் தீர்க்கதரிசியான பாம்பு பாறைகளிடையே இருந்த ஒரு பொந்தில் நுழைந்து மறைந்தது.

(ருஷ்ய நாட்டு நாடோடிக் கதை)



இவன்: அதோ போகிறாரே அவரைத் தெரியுமா? அவர்தான் இந்தப் பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியர்; என் வாழ்நாளிலேயே அவரைப் போல ஒரு சிடுமூஞ்சியை, மோசமானவரை நான் கண்டதில்லை.

அவன்: நான் யார் என்று தெரியுமா உனக்கு? நான்தான் நீ குறிப்பிடும் அந்தச் சிடுமூஞ்சி மோசத்தின் மகன்!

இவன்: நான் யார் தெரியுமா?

அவன்: தெரியாதே.

இவன்: (தனக்குள்) அப்பாடா தப்பினேன்!



(கிளி ஜோசியத்தைப் பார்த்தபடி இரண்டு பையன்கள்)

ஒருவன்: இந்த அட்டைகளைக் கொண்டு ஒருவருடைய வருங்காலத்தை எப்படிச் சொல்ல முடியும்?

மற்றவன்: எங்க அம்மாவாலே முடியறதே! என்னுடைய பிராகரஸ் ரிப்போர்ட் கார்டை ஒரு தடவைதான் பார்ப்பாள். அந்த நிமிஷமே எங்க அப்பா வந்ததும் என்ன நடக்கும் என்பதைச் சொல்லி விடுவாளே!



ஒரு மண் புழு, பூமியிலிருந்து தலையை நீட்டிக் கொண்டு வெளியே எட்டிப் பார்த்தது. எதிரே ஒரு மண் புழுவைப் பார்த்தது. முதல் மண் புழு சொல்லியது: ''நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்! நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்படுகிறேன்!''

பதில் வந்தது: ''அசட்டுத்தனமாக உளறாதே! நான் உன் உடலின் மறு கோடியாக்கும்!''

தோன்றியது எப்படி?

காந்தத்தின் கதை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே நடந்தது இது. ஐரோப்பாவில் அப்போது தலை நிமிர்ந்து நின்ற சாம்ராஜ்யங்கள் பல. அவைகளுள் கிரேக்க, ரோமானிய சாம்ராஜ்யங்களின் வளர்ச்சியும் வாழ்வும் நாகரிகமும்தான் இன்றைய ஐரோப்பிய நாகரிகத்தின் அடிப்படையாகும்.

பண்டைய கிரேக்க நாட்டில் 'மாக்னஸ்' என்ற பெயருடைய ஒரு பையன் இருந்தான். அவன் ஓர் ஆட்டிடையன். ஆடு மேய்ப்பவர்களிடம் என்ன இருக்கும்? அவைகளை மேய்ப்பதற்கான ஒரு குச்சி இருக்குமில்லையா? அந்தக் குச்சி ஆடுகளை ஒன்றுசேர்த்து ஓட்டிச் செல்ல மட்டுமா பயன்படும்? இல்லை. அதன் நுனியில் இரும்பாலான 'தொரட்டி' இருக்கும். அதன் உதவியால் உயரமான மரத்திலுள்ள இலைகளை முறித்துத் தன் ஆடுகளுக்குப் போடுவான் ஆட்டிடையன். இப்படிப்பட்ட 'தொரட்டிக் குச்சி' ஒன்று மாக்னஸிடமும் இருந்தது. ஒரு நாள், அதை ஒரு கல்லில் ஊன்றியபடி நின்று கொண்டிருந்தான் மாக்னஸ். ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அப்போது தொரட்டி முனை எப்படியோ கீழேயும் மற்ற முனை மேலேயுமாக மாறி விட்டிருக்கிறது. மாக்னஸ் அதைக் கவனிக்கவில்லை.



ஆட்டு மந்தையிலிருந்த ஆடுகளில் ஒன்றுக்குக் குஷி பிறக்க அது கூட்டத்தை விட்டுத் துள்ளி ஓடியது. மாக்னஸ் அதை மடக்கிக் கொண்டு வந்து மந்தையில் சேர்க்க, ஊன்றிக் கொண்டு நின்ற தொரட்டிக் குச்சியை எடுத்துக் கொண்டு கிளம்பினான். ஆனால் அவனை யாரோ பிடித்து இழுத்து நிறுத்தியது போலிருந்தது. ஓடும் ஆட்டையே பார்த்துக் கொண்டிருந்த மாக்னஸ் 'என் கைத் தொரட்டியைப்பற்றி யார் இழுப்பது?' என்று திரும்பிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! அங்கு யாரையும் காணவில்லை. ஆனால்...? தொரட்டியின் இரும்பு முனையைத் தான் ஊன்றி நின்ற பாறையிலிருந்து எடுக்க முடியவில்லை. அது அந்தப் பாறையோடு ஒட்டிக் கொண்டிருந்தது. மாக்னஸுக்கு வியப்பான வியப்பு! ஆட்டை மறந்தான். அப்படியே அந்தப் பாறையின் அருகில் உட்கார்ந்தான். 'இந்தப் பாறையிலுள்ள ஏதோ ஒரு மாய சக்தி இரும்பைத் தன்பால் இழுத்து ஒட்ட வைத்துக் கொள்ளுகிறது' என்ற முடிவுக்கு வந்தான். இப்படிப்பட்ட பாறைக் கல்லை, அதன் சக்தியை முதன் முதலில் கண்டுபிடித்தது மாக்னஸ்தான். இதன் பிறகு வேறு பலரும் இரும்பை ஆகர்ஷிக்கக் கூடிய பாறைத் துண்டுகளைக் கண்டு பிடித்தார்கள். இருந்தாலும், இம்மாதிரியான இரும்பைத் தன்பால் இழுத்துக் கொள்ளும் கல்லை மாக்னஸ் கண்டு பிடித்ததால் அதற்கு 'மாக்னட்' என்றே பெயர் வைத்தார்கள். இப்படி இரும்பை இழுத்து ஒட்ட வைத்துக் கொள்ளும் சக்திக்கு நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? 'காந்தம்' என்று இல்லையா? காந்தம் பிறந்த கதை இது தான்.

கிரீஸ் நாட்டின் ஒரு பகுதியான மாக்னீஷியா என்ற ஜில்லாவிலிருந்து காந்தக் கல் பாறைகள் கிடைத்ததினால் இதற்கு 'மாக்னட்' என்று பெயர் ஏற்பட்டது என்றும் சிலர் கூறுகிறார்கள். அது எப்படியானால் என்ன? உலகத்துக்குக் காந்தம் கிடைத்துவிட்டது.

இன்னொரு கதை

எதையும் தங்களிடமிருந்தே பிறந்ததாகப் பெருமையடித்துக் கொள்ளும் சீனர்கள் காந்தத்தை மட்டும் விடுவார்களா! காந்தத்தைப்பற்றி முதன்முதலில் அறிந்தவர்கள் தாங்கள்தான் என்று பாரம்பரியப் பெருமையோடு கீழ்க்கண்ட வரலாற்றைக் கூறுகிறார்கள் சீனர்கள்.

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னே சீனப் பேரரசை 'ஹுவாங்டி' என்ற

மன்னர் ஆண்டு வந்தார். எப்போதுமே சீன ராஜ்யம் பரந்ததுதான். ஒரு சமயம் மன்னர் பகைவனோடு போரிடப் போர்க் களத்துக்குப் போக வேண்டியிருந்தது. அப்போது நல்ல கனத்த மூடு பனி. வழியே தெரியவில்லை. இக்குத் திசை தெரியாத பரந்த சம வெளியில் மன்னர் 'ஹாங்டி' தம் விரோதியை எதிர்த்து விரட்டப் போய்க் கொண்டிருந்தார். ஆனால் திசை தப்பி விடவில்லை. முன்னால் உள்ளது என்ன என்று தெரிந்து கொள்ள முடியாத அத்தனை மோசமான மூடு பனியில் அவரால் எப்படிச் சரியான திசையில் முன்னேற முடிந்தது? அவரது ரதத்தில் ஓர் அழகிய பெண்ணின் சிலை முன்னால் கையை நீட்டியபடி நிறுத்தப்பட்டிருந்தது. அந்தச் சிலை சுழலும் தன்மையுடையது. நீட்டிய அதன் கரம் எப்போதும் தென் திசையையே சுட்டிக் காட்டும். வேறு திசைக்குத் தேர் திரும்பினாலும் பெண் சிலை சுழன்று ஒரு குறிப்பிட்ட திசையையே காட்டியது. அது காட்டும் திசை தென் திசை. இந்தச் சிலையின் உதவியினால் மன்னர் ஹாங்டி தாம் செல்ல வேண்டிய திசையை அறிந்து விரோதியை வென்று விரட்டி வெற்றி வீரராகத் திரும்பினார். இது கதையாக இருக்கலாம். ஆனால் இதில் உள்ள பெரிய உண்மை என்ன தெரியுமா? அந்தப் பெண்ணின் சிலைக்குள் காந்தம் இருந்திருக்க வேண்டும். காந்தத்தின் ஒரு கை எப்போதும் தென் திசையைத்தானே நோக்கிக் கொண்டிருக்கும்? ஆகவே, பரந்த சீன சாம்ராஜ்யத்தில் யாத்திரீகர்கள் தங்கள் வழியைத் தெரிந்து கொள்ளக் காந்த சக்தி கொண்ட ஊசிகள் பொருத்தியதோர் அமைப்பைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள், பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே. அது இன்றைய திசை காட்டும் கருவியைப் போல் முழுமையுடையதாக இல்லாதிருக்கலாம். ஆனால் காந்தத்தின் சக்தியை அறிந்து அதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் சீனர்கள் என்பது தெரிகிறது.


அறுநூறு ஆண்டுகளுக்கு முன்புதான் ஐரோப்பியர்களிடையே காந்த ஊசி பொருத்திய ('காம்பஸ்') திசை காட்டும் கருவி பழக்கத்துக்கு வந்தது. இக்கருவி கண்டு பிடிக்கப்படுமுன்பாக மாலுமிகள் கடற்கரையைவிட்டு அதிக தூரம் கடலில் செல்லப் பயந்து வந்தார்கள். பரந்து விரிந்த கடலில் திசை தவறிப் போனால் என்ன செய்வது? காந்த ஊசியைக் கொண்டு காம்பஸ் தயாரிக்கப்பட்டது. மனிதன் துணிச்சலுடன் கடலைக் கடக்க முற்பட்டான். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்க முடிந்ததற்கும், வாஸ்கோட காமா இந்தியாவைக் காண முடிந்ததற்கும், டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் போர்த்துகீசியரும் தென் ஆப்பிரிக்கா, இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா இந்தியா என்றெல்லாம் கடற்பிரயாணம் செய்ததற்கும் உறுதுணையாக இருந்தது இந்தக் காந்தத்தின் சக்திதான். காந்தம் என்பது என்ன?


நாம் பேச்சு வழக்கில், 'அவனுக்குக் காந்தக் கண்கள்' 'காந்தம் போல் பிறரைக் கவரக்கூடிய வாக்குச் சாதுரியம் அவனிடமுள்ளது' என்றெல்லாம் சொல்லக் கேட்டிருக்கிறோமில்லையா?

ஆகவே இதனால் காந்தத்துக்குத் தன்னிடம் இழுத்துக் கொள்ளும் ஆற்றல் உண்டு என்பது புலனாகிறது. காந்தம் எல்லாப் பொருள்களையும் தன் பக்கம் இழுத்துக்கொள்ளுமா? இல்லை. இரும்பு எஃகினாலான பொருள்களையே தன் பக்கம் இழுத்துக் கொள்ளும். இப்படி ஆகர்ஷிக்கும் இந்தச் செயலுக்குக் காந்த சக்தி 'மாக்னடிஸம்' என்று பெயர்.

காந்தத்தின் இன்னும் மற்ற குணங்கள் என்ன? நீங்கள் காந்த இரும்பு தயாரிக்கலாமா? எப்படி? காந்தத்தின் உபயோகம் என்ன? மின்சாரக் காந்தம் — அதை எப்படித் தயாரிப்பது? இவைகளை நீங்களே தயாரிக்கும் முறைகள் பற்றி வரும் இதழ்களில் ஒரு 'காந்த'மான கட்டுரை வரப் போகிறது.

வி. கே.





சுண்டு குண்டு சீமாத் தாத்தா!

"சுண்டு, குண்டு, நீங்க இரண்டு பேரும் விஷமம் செய்யாமல் சமர்த்தா இருந்தால் 'படி தாண்டாப் பத்தினி' என்ற சினிமாவுக்கு அழைத்துப் போவேன்'' என்றார் தாத்தா! இரண்டு பேரும் ஓடிவந்து, ''எப்போ தாத்தா?'' என்று கேட்டார்கள்.

''மணி இப்ப ஐந்து ஆகிறது இல்லையா? இன்னும் அரை மணியில் கிளம்ப வேண்டும்'' என்றார், சீமாத் தாத்தா. பையன்கள் குதூகலத்துடன் ஓடினார்கள்.

''டேய், பசங்களா! தயாரா? கிளம்பலாமா?'' என்று தாத்தா குரல் கொடுத்தபோது '' ஓ! ரெடி தாத்தா, கிளம்பலாம்'' என்று இரு குரல்களும் வெளிவந்தன. கடிகாரத்தை எட்டிப் பார்த்தார் தாத்தா. 'ஐயையோ! நாழியாகிவிட்டதே' என்று பறக்கப் பறக்க விபூதியை எடுக்கப்போனவர் 'தொபீர்' என்று கீழே விழுந்தார். சுண்டு விளையாடிக்கொண்டிருந்த விளையாட்டு ரயில் மேல் காலை வைத்ததுதான் காரணம். அது ரொம்பத் தூரம் உருண்டு போய் தாத்தாவையும் உருளச் செய்தது. தாத்தாவுக்கு மண்டையில் சரியான அடி. வந்தது கோபம் தாத்தாவுக்கு. ''அயோக்கியப் பயல் இந்தச் சுண்டு! தடியா! உன் விஷமம்தானே இது? சினிமாவுக்கு நீ கிடையாது. வந்தேன்னா உன்னைப் பிச்சுப் பிடுவேன். போ, உள்ளே போ!'' என்று கத்தினார். 'இந்த உலகத்திலே நான்தான் சமர்த்து, சாது. விஷமம் செய்யாதவன். சினிமாவுக்குப் போக நான் தான் லாயக்கு'என்ற முகத்தோடு நின்ற குண்டுவைப் பார்த்து, ''வாடா, கண்ணு இங்கே. விஷமம் செய்யாமல் சமர்த்தா நீதான் இருந்தே. உன்னை மட்டும் அழைச்சுண்டு போகப் போறேன். நீ போடா, உள்ளே!'' என்று சுண்டுவைப் பார்த்துக் கத்தினார்.

தாத்தா குண்டுவைத் தனியாக அழைத்துப் போய் ஒரு பொட்டலத்தைக் கொடுத்து, ''இப்பப் பிரிக்க வேண்டாம். சினிமாவில் சாப்பிடலாம். இல்லேன்னு அங்கு வந்து ஏதேனும் வாங்கிக் கொடுன்னு கேட்டு என்னை நச்சரிப்பாய்!'' என்று கூறிப் பொட்டலத்தை அவனிடம் கொடுத்தார் தாத்தா ரகசியமாக.

''ஓடு, வாசலில் போய் நில்லு. இதோ வருகிறேன்'' என்று உள்ளே போய்க் காயத்துக்கு மருந்து போட்டுக்கொண்டு வெளியில் வந்தவர் வாசற்படி தாண்டியதுதான் தாமதம், ''சர்ர்!'' என்று சறுக்கி வாசலில் தேங்கியிருந்த சகதியில் போய் விழுந்தார். ''ஏ, குண்டு! அயோக்கியப் பயலே! சினிமாக் கொட்டகையில் சாப்பிட வாழைப் பழத்தைக் கொடுத்தால் அதை நீ இங்கேயே உரித்துத் தின்று விட்டுத் தோலை வேறு வழியில் போட்டு வேடிக்கையா பார்க்கிறே? நீயும் சினிமாவுக்குக் கிடையாது. போ, போடா உள்ளே!'' என்று கத்தினார் தாத்தா.

''சினிமாப் போனால் போகிறது. நீங்கள் விழுந்ததில் சகதித் தண்ணீரில் என் புதுச் சட்டை நாசமாகி விட்டது. வேறு புதுசா வாங்கப் பணம் கொடு, தாத்தா'' என்று ஓலமிட்டான் குண்டு.

அதைத் தொடர்ந்து ''என் ரயில்மேல் காலை வைத்து, ரயிலைச் சுக்குநூறாகச் செய்து விட்டாயே, தாத்தா! புது ரயில் வாங்கிக் கொடு'' என்று சுண்டுவும் அலறினான். தாத்தா காதைப் பொத்திக் கொண்டார். அவர்கள் அலறலை நிறுத்தினால் போதும் என்று ஆகிவிட்டது அவருக்கு. பர்ஸைத் திறந்து அவர்களுக்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுத்தவுடன், மெள்ள எழுந்து உள்ளே போனார், சொட்டச் சொட்ட அழுக்குத் தண்ணீருடன்.

சுண்டுவும் குண்டுவும் உள்ளே ஓடிப் போய்க் கதவைச் சாத்திக் கொண்டு சிரி சிரி என்று சிரித்தார்கள். ''டேய்! நீ என்னைவிடச் சமர்த்தாய் இருந்து விடப் போறயேன்னு எனக்கு ஏகக் கவலையாயிடுத்துடா, குண்டு!'' என்றான் சுண்டு.

''அப்படி இருந்து விடுவேனுடா? இன்னொரு வேடிக்கை பார்த்தையா? 'படி தாண்டாப் பத்தினி' சினிமாவுக்குப் போறதுக்குத் தாத்தாவால் படி தாண்ட முடிந்ததா?'' என்று சிரித்தான் குண்டு.

சாமா



நீரை உருவாக்கும் வாயு

“காற்றில் உள்ள வாயுக்கள் என்ன?” என்று கேட்டால் உடனே நீங்கள் பிராண வாயு, கரியமிலவாயு, நைட்ரஜன் என்று கூறுவீர்கள். அதே போல நீரில் உள்ள வாயுக்கள் பிராணவாயு, ஜலவாயு என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் இதை முதன் முதலில் அறிந்து சொன்னவர் யார் என்று தெரியுமா? **ஹென்றி காவெண்டிஷ்** என்ற பிரபல விஞ்ஞானிதான். இவர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். ஜலவாயு என்று ஒரு வாயு இருப்பதைக் கண்டுபிடித்தவரே இவர்தான்.

இருநூறு வருஷங்களுக்கு முன்னால் வாழ்ந்த இந்த விஞ்ஞானி பெரிய பணக்காரர். ஆனால் ரொம்ப சங்கோஜி. யாருடனும் பேசமாட்டார். தம் வாழ்நாளை விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கே அர்ப்பணித்துப் பல அரிய கண்டுபிடிப்புக்களை உலகுக்கு அளித்தவர். இவைகளில் ஒன்றுதான் இப்போது நாம் ஜலவாயு என்று அழைக்கிறோமே அது.

ஜலவாயுவைத் தயாரிக்கும் முறையை முதன் முதலில் கண்டவர் காவெண்டிஷ்தான். துத்தநாகத்தில் வீர்யம் குறைந்த கந்தகாமிலக் கரைசலை ஊற்றினார். துத்தநாகத்திலிருந்து கொப்புளங்களாக வாயு குமிழியிட்டுக் கொண்டு கிளம்பியதைக் கண்டார். இந்த வாயுவை ஒரு பாட்டிலில் தேக்கி நிரப்பிக் கொண்டார். புதியதொரு வாயுவைக் கண்டுபிடித்ததாகத்தான் எண்ணினார் காவெண்டிஷ். ஆனால் அது நீரை உருவாக்கும் ஒரு வாயு என்பது அவருக்கு முதலில் தெரியவில்லை.

விஞ்ஞானிகள் காவெண்டிஷ் தயாரித்த இந்தப் புதிய வாயுவில் ஆர்வம் காட்டலானார்கள். அதைக் கொண்டு சோதனைகள் நடத்தினார்கள். புதிய வாயுவை வேறு வாயுவுடன் கலந்து யூடியோ மீட்டர் என்ற ஒரு பித்தளைக் கருவியில் நிரப்பி அதில் மின்சாரத்தைப் பாய்ச்சினார்கள். அதன் விளைவு கருவியிலிருந்த இரு வாயுக்களும் மறைந்து ஒரு விநோதமான பனிப்படலம் அதில் உருவாகியிருந்தது. இந்தச் சோதனையின் முடிவை யாராலும் விளக்கிச் சொல்ல முடியவில்லை. ‘இரண்டு வாயுக்களைக் கலந்து எந்தத் திரவ பதார்த்தத்தை உருவாக்கிவிட முடியும்?’ என்று நினைத்தார்கள். காவெண்டிஷ் இந்தச் சோதனையில் ஆர்வம் காட்டினார். இரு வாயுக்களின் கலவையில் மின்சாரம் பாய்ந்ததினால் ஏற்பட்ட திரவம் தண்ணீராகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்தார். இதை உறுதிப்படுத்திக் கொள்ள அந்தச் சோதனையைப் பல தடவைகள் செய்து உருவான ஆவி போன்ற புகையை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் சேகரித்துக் கொண்டார். போதுமான அளவு வந்ததும் அந்தத் திரவத்தைச் சோதித்துப் பார்த்தார். அவர் ஊகம் சரிதான். அது தண்ணீர்தான்!


மற்ற விஞ்ஞானிகள் நினைத்தார்கள், ‘தாங்கள் கலந்த இரு வாயுக்களிலுமே தண்ணீர் இருந்திருக்கிறது. மின்சாரம் பாய்ந்ததினால் புதிதாக எதுவும் ஏற்பட்டுவிடவில்லை’ என்று. பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானியான லாவஷியர், காவெண்டிஷினுடைய ஆராய்ச்சி முடிவுதான் சரி என்றும் மற்றவர்கள் நினைப்பது தவறு என்றும் கூறிவிட்டார். ‘தண்ணீர் உண்டானது இரு வாயுக்களின் சேர்க்கையினால்தான். தண்ணீர் என்பது இரு வாயுக்களின் கலவை.’ ஆகவே காவெண்டிஷ் கண்டுபிடித்த வாயுவுக்கு ‘ஹைட்ரஜன்’ என்று பெயரிட்டார்கள். ஹைட்ரஜன் என்றால் ‘நீரை உருவாக்குபவன்’ என்று பொருள்.

ஹென்றி காவெண்டிஷ் தம் சோதனையைத் தொடர்ந்து நடத்தினார். பிராணவாயு, ஜலவாயு இரண்டும் எந்த விகிதத்தில் கலந்து தண்ணீராகிறது என்பதைக் காண விரும்பினார். ஒரே அளவில் இரு வாயுக்களையும் கலந்து கண்ணாடியினாலான யூடியோ மீட்டரில் அடைத்து அதனுள் மின்சாரத்தைச் செலுத்தினார். மின் பொறிகள் ஊடுருவிய பிறகு அந்தக் கலத்தில் ஒரே ஒரு வாயுதான் மிஞ்சி இருந்தது. அது பிராண வாயு. அதன் அளவைக் கணக்கிட்டார். தான் கலந்ததில் பாதி மீதமிருந்தது. ஜல வாயுவே இல்லை. அப்படியானால் இரு பங்கு ஜலவாயுவோடு ஒரு பங்கு பிராணவாயு கலந்து தண்ணீராகிறது என்ற முடிவுக்கு வந்தார் காவெண்டிஷ்.

ஹென்றி காவெண்டிஷுக்குத் தாம் கண்டுபிடித்த புதிய வாயுவான ஹைட்ரஜன் பிற்காலத்தில் எப்படியெல்லாம் பயனுள்ளதாக இருக்கப் போகிறது என்பதைப் பற்றி ஏதும் தெரியாது. உலகிலேயே மிக இலேசானதான ஒரு பொருளைக் கண்டு பிடித்திருக்கிறோம் என்ற உண்மைகூட அவருக்கு அப்போது தெரியாது!

— **விகேயெம்**




வீராதி வீரன்
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி..
என் நண்பன் கழுதைக்குச் சைகை மூலம் உத்தரவிடுகி றான்..
இறங்கு கீழே.. ஏதாவது சூழ்ச்சி செய் தால் சுட்டுக் கொன்று விடு வேன்.
4
ரஹீமின் உத்தரவுப்படி கழுதை முன்னால் நகர, அதனால் ஆத்திரமடைந்த பாகிஸ்தானிய வீரன் துப்பாக்கிக் கட்டையால் அதைக் குத்தவே, கோபங் கொண்ட கழுதை தன் பின்னங்கால் களைப் பயன்படுத்தியது!
அயோக்கிய நாய்கள், தப்பி விட்டார்கள். எங்கு போனாலும் விட மாட்டேன்.
என் அப்பாவின் நண் பரான ஒரு டாக்டர் இருக்கிறார். அவர் நமக்கு உதவுவார். தெருவில் யாருமில் லையே?
சீக்கிரம், சட்டென்ற உள்ளே வாருங்கள்.. ம்.


நன்கு ஆழமாகப் பதிந்திருக்கிறது. தைரியமாக இருங்கள். விரைவில் எடுத்து விடுகிறேன்.
கழுதையிடம் உதை வாங்கிய வன், தன் ஆட்க ளோடு எங்களைத் தேடி வருவான். நான் பார்த்துக் கொண்டி ருக்கிறேன். நீங்கள் காரியத்தை முடியுங் கள்.
ரஹீமின் ஊகம் சரியாயிற்று. கழுதை உதை பட்டவன் தன் சகாக்களுடன் வந்து கொண் டிருந்தான்.
அதே கழுதை தான். அவர்கள் இந்த வீட்டிற்குள் தானிருக்க வேண்டும். நாம் எல்லோருமாகப் போனால் அவர்கள் தப்பி விடு வார்கள். அருகில் வா. ஒரு வழி சொல்லுகிறேன்.
பாகிஸ்தானி வீரர்கள், கழுதையை யும், டாக்டரின் வீட்டையும் தாண்டிப் போனார்கள். ரஹீம் நிம்மதிப் பெரு மூச்சு விட்டான் உள்ளிருந்தபடி.
ரஹீம் நினைத்தபடி அபாயம் விலகிப் போய் விட வில்லை. ராணி (கிளி) திடீரென்று வெளியே பறந்து போயிற்று.
ராணி, ராணி! நீ எங்கே போகிறாய்?
ரஹீம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எதிர் வரிசையில் உள்ள ஒரு வீட்டின் வாசலில் இருந்த பெரிய மரப் பீப்பாய் அருகே போய், அதிலிருந்த ஒரு துவாரத்தின் வழியாக எதை- யோ உன்னிப்பாகப் பார்த்தது. அத னுள் ஒரு பாகிஸ்தானிய வீரன் ஒளிந்து கொண்டிருந்தான்.


டாக்டர், என் ராணியின் திறமையைப் பார்த்தீர்களா? அவர்களின் நடவடிக்கையை அது கவனித்திருக்கிறது. அந்தத் துவாரத்தில் ஒரு— துப்பாக்கிமுனை. நாம் இங்கிருப்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது.
கராச்சிக்காரர்கள் வஞ்சகம் புரிவதில் கை தேர்ந்தவர்கள். உங்களோடு என்னையும் பிடிக்கவே இந்தத் திட்டம். நம் திறமை அவர்களுக்குத் தெரியாது... மெள்ள மாடிக்குப் போகலாம், வாருங்கள்.
உன் ராணியிடம் பாண்டேஜ் துணிச் சுருளைக் கொடுத்து அடுத்த வீட்டு உத்திரத்து மேலாக மாட்டியபடி பறந்து வரச் சொல். நாம் தப்ப இது ஒன்றே வழி.
ராணி, அதோ அந்த மரக் கொம்பு தெரிகிறதா? அதில் இந்தத் துணியை மாட்டி இழுத்து வா—போ!
பலே, பலே.. உன் ராணி எத்தனை அறிவோடு செயல்படுகிறது! சபாஷ்! ராணி, சபாஷ்!
பாண்டேஜ் துணியின் முனையை இந்த உறுதியான கயிற்றோடு முடிந்து அப்படியே இழு. பாண்டேஜுக்குப் பதில் அதில் கயிறு இடம் பெறும்.
கொஞ்ச நேரத்தில் இரு வீடுகளுக்குமிடையே உறுதியான கயிற்றுப் பாலம் அமைந்தது. அதன் வழியே ஊசலாடியபடி மூவரும் அடுத்த வீட்டுக்குத் தப்பினார்கள். பீப்பாய்க்குள் இருந்த பாகிஸ்தானி, டாக்டரின் வீட்டையே இமைக்காமல் கண்காணித்துக் கொண்டிருந்தான். இவர்கள் தப்பிய விதம் பாவம், அவனுக்குத் தெரியாது...!


தொடரும்..

காலைக் காட்சி

நா. சீ. வரதராஜன்



காக்கை வந்தது காக்கை வந்தது
காலை நேரத்திலே — அது
கண்ணைக் கண்ணைச் சாய்த்து வந்தது
வேலி ஓரத்திலே!






மூக்கை மூக்கைத் தேய்த்துக் கொண்டது
மண்ணின் ஈரத்திலே! — பின்
முனகிக் கொண்டு பறந்து விட்டது
இன்னும் தூரத்திலே!



கோழி வந்தது கூவி நின்றது
கூரை ஓட்டினிலே — பின்
குதித்துப் பறந்து இறங்கி வந்தது
குப்பை மேட்டினிலே!



கீழே நின்று சிறக டித்தது
சேவல் பாட்டினிலே — அதைக்
கேலி செய்யக் குரலெ டுத்தது
குருவி கூட்டினிலே!



காக்கை, குருவி, கோழி வந்தது
காட்சி தந்ததடி! அந்தக்
காட்சி தெரியக் காட்டு வதற்குக்
காலை வந்ததடி!





பஞ்சவர்ணக் கிளி

உண்டி வில்லினால் குறி பார்த்துப் பறவைகளை அடிப்பதில் கெட்டிக்காரன் ராமு. அவன் அடித்த அடியில் கால் ஒடிந்த பறவைகளும் சிறகு உடைந்த பறவைகளும் ஏராளம். அதுமட்டுமல்ல உயிரோடு பறவைக் குஞ்சுகளைப் பிடித்துக் கூண்டிலே வைத்து வளர்ப்பதில் அவனுக்கு அலாதியான பிரியம்.

ஒரு நாள் அழகிய கிளி ஒன்றைப் பார்த்தான். அதை உயிருடன் பிடித்துக் கூண்டிலே வளர்த்து அதற்கு நாம் பேசுவது போல் பேசச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தான். உண்டி வில்லினால் குறி பார்த்துக் கிளியின் காலில் அடித்தான். அடுத்த விநாடி கிளி கீழே 'பொத்' என்று விழுந்தது. அடிபட்ட கிளிக்கு முதலுதவி செய்து பிழைக்க வைத்தான்.

ராமுவின் தாயார் அவன் செய்கையைப் பலமுறை கண்டித்தும் அவன் திருந்தவில்லை. அவன் தந்தை பலமுறை புத்திமதிகள் கூறியும் அவன் கேட்கவில்லை.

கிளி மிகவும் பரிதாபமாகக் கத்தியது. ராமு பள்ளிக்கூடம் சென்றிருந்ததால் அவன் தந்தை கூண்டைத் திறந்து கிளியை வெளியே பறக்க விட்டுவிட்டு அவர் தம் வேலைக்குச் சென்றுவிட்டார்.

பள்ளியிலிருந்து ராமு வந்ததும் ஆவலுடன் கூண்டைப் பார்த்தான். கூண்டில் கிளி இல்லாதிருக்கவே தன் தந்தைதான் கிளியை வெளியே விட்டிருப்பார் என்று புரிந்துகொண்டு அந்தக் கிளியை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று உண்டிவில்லை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். ஒவ்வொரு மரமாகப் பார்த்தான். எங்கும் கிளியைக் காணவில்லை. வீட்டை விட்டுப் புறப்பட்டவன் பக்கத்திலிருந்த அடர்ந்த காட்டுக்குள் சென்றான். ஒரு மரத்தில் கிளி கத்துவது போல் கேட்கவே அந்த மரத்தைப் பார்த்தான். அழகான பஞ்சவர்ணக் கிளி ஒன்று அந்த மரத்தில்





பொன்மலை பரிமளம்

உட்கார்ந்து கொண்டிருந்தது. 'அதை உயிருடன் எப்படிப் பிடிப்பது?' என்று நினைத்துக் கொண்டவன் உண்டி வில்லில் குறி பார்த்துக் கொண்டே மெதுவாக நடந்தான். அப்பொழுது அவன் காலில் ஒரு பெரிய முள் குத்தியது. 'ஆ' என்று அலறிய ராமு அந்த முள்ளைப் பிடுங்கினான்.. காலிலிருந்து ரத்தம் பீறிக் கொண்டு வந்தது. அந்தச் சமயம் பார்த்து மரத்திலிருந்த கிளி 'கீச் கீச்' என்று கத்திக் கொண்டு வானத்தில் பறந்தது. வலியையும் மறந்து கிளி பறப்பதைப் பார்த்தான். 'ஆகா, பஞ்ச வர்ணக் கிளி என்ன அழகாகப் பறக்கிறது! அந்தக் கிளிக்கு இறக்கை இருப்பது போல் எனக்கும் சிறகுகள் இருந்தால், நானும் கிளியாக மாறினால் அதைப் போல் பறப்பேனே' என்று நினைத்தான் ராமு. மறு விநாடி ராமு அழகிய பஞ்ச வர்ணக் கிளியாக மாறினான். 'என்ன ஆச்சரியம்! நான் கிளியாக மாறிவிட்டேனே! பறந்து பார்க்கலாமா?' என்று மனத்துக்குள் நினைத்ததும் பறந்தான். வானத்தில் விர்ரென்று மேலே சென்று வட்டமிட்டான். பறந்து கொண்டே ஊருக்குள் வந்தான். 'அட, இந்தப் பெரிய மனிதர்களெல்லாம் மிகவும் சிறியவர்களாகத் தெரிகிறார்களே!' என்ற மகிழ்வுடன் தன் வீட்டுத் தோட்டத்துக்கு வந்தான். 'கீ...கீ...' என்று கத்தினான் பஞ்சவர்ணக் கிளியாக மாறிய ராமு.

அவன் அன்னை கிளியின் சத்தம் கேட்டதும் வீட்டை விட்டுப் போன ராமு வந்து விட்டான் என்று தோட்டத்துக்குள்வந்து பார்த்தாள். அங்கு அழகிய பஞ்ச வர்ணக் கிளி ஒன்று மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டிருந்தது. 'இதைப் பிடித்துக் கூண்டுக்குள் அடைத்து விட்டால் ராமு சந்தோஷப்படுவான்' என்று எண்ணினாள். தன் தாயைப் பார்த்த மகிழ்ச்சியால் 'கீ...கீ...' என்று கத்திக் கொண்டு பறந்து வந்து தன் தாயின் தோளில் உட்கார்ந்தான் ராமு. தன் கைக்கு வந்த கிளியைப் பிடித்துத் தடவிக் கொடுத்துக் கொண்டே அதைக் கூண்டுக்குள் விட்டு அடைத்தாள் ராமுவின் தாயார். கிளியாக மாறியிருந்த ராமு படபடவென்று இறக்கைகளை அடித்துக் கொண்டான். 'ஐயோ, என்ன இது! சிறையில் இருப்பதுபோல் இருக்கிறதே. இனித் தப்ப முடியாதோ' என்ற கவலை ஏற்பட்டது. அப்போது அக்கம் பக்கத்திலிருந்து கிளியைப் பார்க்க வந்த சிறுவர்கள் கூண்டைச் சுற்றி நின்று சத்தம் போட்டார்கள்.

ஒரு சிறுவன் சிறிய குச்சியால் கூண்டுக்குள் இருக்கும் கிளியைக் குத்தி வேடிக்கை பார்த்தான். வலி பொறுக்க முடியாத கிளி அலறியது. கூண்டை விட்டு வெளியேற இறக்கைகளைப் 'பட் பட்'டென்று அடித்துக் கொண்டான் கிளியாக மாறிய ராமு. 'கிளிக்குப் பசிக்கிறது போலிருக்கிறது' என்று ராமுவின் தாய் வாழைப்பழம் ஒன்றைக் கூண்டுக்குள் வைப்பதற்காகக் கூண்டின் கதவைத் திறக்கும்பொழுது திடீரென்று வெளியில் வந்து பறந்தான் ராமு. 'அப்பா! பிழைத்தோம். போதும் போதும் இந்த அவஸ்தை' என்று நினைத்த ராமு இனிமேல் எந்தப் பறவையையும் பிடித்துத் துன்புறுத்தக் கூடாது என்று நினைத்தான். கிளியாக மாறிய அந்த மரத்துக்கே விரைந்து பறந்து வந்தான். அப்பொழுது ஒரு குரல்,



"ராமு! நீ எத்தனை பறவைகளை உண்டி வில்லினால் அடித்துத் துன்புறுத்தியிருக்கிறாய்? அதற்குத் தகுந்த தண்டனை தான் இது!" என்றது.

"யார் பேசுவது? என்னை மறுபடியும் மனிதனாக்கி விடுங்கள். இனிமேல் பறவைகளை அடிக்க மாட்டேன்; துன்புறுத்த மாட்டேன். எல்லா ஜீவராசிகளிடமும் அன்பாக நடந்து கொள்ளுவேன்" என்று பேசுவதாக நினைத்துக் கீச்சு கீச் என்று கத்தினான் ராமு.

"பயப்படாதே! நினைத்ததைக் கொடுக்கும் அதிசய மரமாகிய நான் தான் பேசுகிறேன். ராமு, நீ மறுபடியும் மனிதனாக மாற வேண்டுமானால் சிறிதளவு ரத்தத்தை எனக்கு நீ தியாகம் செய்ய வேண்டும்" என்றது மரம்.

"ரத்தமா! நான் கிளியாக மாறுவதற்கு ரத்தம் சிந்தவில்லையே?"

"யார் சொன்னது? உன் காலில் முள் குத்தி ரத்தம் வரும்பொழுது நீ என்ன நினைத்தாய்? அது போல் மீண்டும் உன் உடலிலிருந்து சிறிது ரத்தம் சிந்தினால்தால் நீ நினைப்பதை அடையலாம்" என்று மரம் சொன்னது.

உடலிலிருந்து ரத்தத்தை எப்படி வரவழைப்பது? அந்தச் சமயத்தில் அந்தப் பக்கம் வந்த வேடன் ஒருவன், அழகிய பஞ்சவர்ணக் கிளி மரத்தில் இருப்பதைக் கண்டதும் வில்லினால் கிளியை அடித்தான். அம்பு உடலில் தைத்ததும் ரத்தக் காயத்துடன் கிளியாக மாறிய ராமு கீழே விழுந்தான்.

"அம்மா, செத்தேன்" என்று அலறிக்கொண்டே எழுந்தான் ராமு. அவன் போட்ட சத்தத்தில் அவன் பெற்றோர் "என்ன ராமு, என்ன? கனவு கண்டாயா?" என்று கேட்டனர்.

"கிளி..நான் கிளி..! அம்மா, வில்லினால் ஒருவன் என்னை அடித்துக் கொல்லப் பார்த்தான்...." என்று உளறினான் ராமு.

"சரிதான். கனவு கண்டிருக்கிறான். தூக்கத்தில் கூட உனக்குக் கிளியின் நினைவுதானா?" என்று அவன் தந்தை கோபமாகக் கேட்டார்.

"அப்பா, இனிமேல் நான் பறவைகளை அடிக்க மாட்டேன்" என்று கூறிக்கொண்டே உண்டி வில்லை எடுத்து உடைத்தான். கிளிக் கூண்டைக் குப்பைத் தொட்டியில் எறிந்தான்.


ராமுவின் செய்கையைக் கண்ட அவன் பெற்றோர்கள் ராமு திருந்தியதைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

கோபாலனைக் குதிக்கச் செய்யுங்கள்


விடுமுறை நாட்களை எப்படிக் கழிப்பது என்று கையும் மனமும் துருதுரு என்று அலைகிறதில்லையா? எதிர்ப்பக்கத்திலுள்ள பொம்மையைச் செய்து விளையாடுங்கள். ஒரு கெட்டி அட்டை, கொஞ்சம் ட்வைன் நூல், கத்திரிக்கோல், அழகுபடுத்த வர்ணப் பென்சில்கள், ஒரு பிளாஸ்டிக் வளையம் இவைதான் தேவை கோபாலனை உருவாக்கிக் குதிக்க வைக்க.

எதிர்ப்பக்கத்தில் உள்ள படத்தில் கோபாலனின் அவயவங்கள் வரையப்பட்டிருக்கின்றன. அவைகளை அப்படியே ஒரு அட்டையில் காப்பி செய்து கொள்ளுங்கள். பிறகு கோபாலனின் சட்டை பனியன் காலணிகளுக்கு ஏற்ற அழகான வர்ணம் தீட்டுங்கள். இனி அவைகளைத் தனித் தனியாக வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். புள்ளிகளிலெல்லாம் ஊசி கொண்டு குத்தித் துவாரம் செய்து கொள்ளுங்கள். ட்வைன் நூலிலிருந்து மூன்று அங்குல நீளத்துக்கு ஒன்பது துண்டுகளை வெட்டிக் கொள்ளுங்கள். இதில் ஆறு துண்டுகளை எடுத்து அவற்றின் நடுவே பெரிய முடிச்சுப் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். A-A. B-B, C-C, D-D, E-E, F-F, என்று குறியிட்டுள்ள பாகங்களின் துவாரங்களைச் சேர்த்து அதற்குள் இந்த நூல் துண்டுகளின் இரு முனைகளையும் சேர்த்து நுழைத்து (ஓட்டைக்குள் முடிச்சு நழுவி நுழைந்து போகாத வகையில்) இரண்டு மூன்று முடிச்சுக்களை முடியுங்கள். இதே மாதிரி கைகளையும் கால்களையும் (1-2, 3-4) மூன்றங்குல நூல் துண்டினால் இணைத்துக் கட்ட வேண்டும். மீதியுள்ள ட்வைன் நூலைக் கைகளை இணைத்துக் கட்டி யுள்ள நூலின் மத்தியில் கட்டி நன்றாக முடியிட்டு, கால்களை இணைத்துக் கட்டியுள்ள நூலின் மத்தியில் ஒருசுற்றுச் சுற்றிக் கொண்டு வந்து அதன் மறு கோடியில் பிளாஸ்டிக் வளையத்தைக் கட்டிவிட வேண்டும். தலையில் உள்ள புள்ளியில் துவாரமிட்டு, அதில் ஒரு நூலைக் கட்டித் தொங்க விடுங்கள். இனி வளையத்தில் ஒரு விரலை மாட்டிக் கொண்டு நூலை இழுத்தால் கோபாலன் கைகளையும் காலையும் உதைத்துக் கொண்டு குதிப்பான். கும்மாளம் போடுவான். ரொம்பத் தமாஷாக இருக்கும். செய்து பாருங்கள். அவன் அழுவதைக் கண்டு ஆனந்தப் படலாம்.

— திருமதி பி. வி ராவ்


பின்
அமைப்பு
1
A
2
B
A
B
C
D
3
C
4
D
E
E
F
F
குதிக்கும்
கோபாலன்


மூளைக்கு வேலை



மறதி மகாதேவன் ஒரு பெரிய ஜீனியஸ். ஆமாம், எதையும் யந்திர மயமாக்கி மகிழ்வதில் அவருக்கு ஒரு தணியாத ஆசை. ஆனால் ரொம்ப மறதிக்காரர். அதோ பாருங்கள், தக்காளி 'சூப்' கொண்டு வந்து வைத்தால் ருசிக்கு ஏற்றவாறு உப்பையோ, மிளகுத் தூளையோ தூவிக் கொண்டு சாப்பிட வேண்டியதுதானே? அதுதான் அவரிடம் கிடையாது. உப்பு, மிளகுத் தூள் பாட்டிலை ஒரு பாத்திரத்தில் வைத்திருக்கிறார் மகாதேவன். சூப்பை அதன் கீழே வைத்து அந்த யந்திரத்தின் கைப் பிடியைத் திருப்பினால்... அது சரி, கொஞ்சம் பொறுங்கள். மறதி மகாதேவனுக்கு ஒரு குழப்பம். கைப் பிடியை எந்தப் பக்கம் திருப்பினால் மிளகுப் பொடி விழும் எப்படித் திருப்பினால் உப்பு விழும் என்பது மறந்து போய்த் தொலைந்துவிட்டதுபோல் இருக்கிறது. போகட்டும். அம்புக் குறியிட்ட திசையில் கைப் பிடியைச் சுழற்றினால் தக்காளி சூப்பில் உப்பு விழுமா மிளகுத் தூள் விழுமா? நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம். யந்திரங்களின் சுழற்சியை உற்றுப் பார்த்து முடிவு கட்ட வேண்டும். சூப் ஆறிப் போவதற்குள் தெரிந்தால் நல்லது. □

★

அருகில் உள்ள படத்தில் 'A' என்றும் 'B' என்றும் இரண்டு அமைப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. Aயைப் போல நான்கு Bயைப்போல ஒன்று ஆக ஐந்து துண்டுகளை இதை அப்படியே ஒரு கார்டு போர்டில் 'டிரேஸ்' செய்து வெட்டி வைத்துக் கொள்ளுங்கள். இந்த ஐந்து துண்டுகளையும் கொண்டு ஒரு சதுரம் உருவாக்க முடியுமா? B துண்டை எடுத்துவிட்டு A அமைப்புத் துண்டுகள் நான்கை மட்டும் கொண்டு ஒரு சதுரம் அமைக்க வேண்டும். இரண்டுமே ரொம்ப சுலபம் — முயன்று பார்த்தால் முடியாதது ஏதுமில்லை.



□ வெற்றிபெறும் காட்சி பின்னுக்குப் போய்க் கொண்டிருக்கும் விந்தையை ஒரு விளையாட்டில் காணலாம். அது என்ன விளையாட்டு ?

□ ஒரு முயல் குடும்பத்தில் உள்ள குழந்தை முயல்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டபடி இருந்தது. ஒவ்வொரு பெண் முயல் குட்டிக்கும் அதற்கு எத்தனை சகோதரிகள் இருந்தனவோ அத்தனை சகோதரர்களும் இருந்தன. அதே போல் ஒவ்வோர் ஆண் முயல் குட்டிக்கும் அதற்கு எத்தனை சகோதரர் உண்டோ அதைப் போல இரு மடங்கு சகோதரிகளைக் கொண்டிருந்தது. அப்படியானால் அந்த முயல் குடும்பத்தில் எத்தனை சகோதரிகள் எத்தனை சகோதரர்கள்?





நாய்: கழுத்திலே பாரத்தைக் கட்டிண்டு தண்ணிரிலே இறங்கறிங்களே?

□

"நீர்தான் நீர்யானையா?"
புகைப்படம்: யு. பி. எஸ்.

"நீ என்ன கொம்பு முளைச்சவனோ?"
புகைப்படங்கள்: என். சுந்தரராஜன்







அன்பு காட்டு

அருந்ததி

ஒரு ஊரில் பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் நல்லவன். சிறந்த சிந்தனையாளன். சாகும்போது மகனை அழைத்தான். ''மகனே! எப்போதும் பறவை, விலங்கினங்களுக்கு அன்பு காட்டு. மனிதனுக்கு அன்பைக் காட்டாதே'' என்று அறிவுரை சொன்னான்.

மகன் தந்தையின் சொல்லை அடிக்கடி நினைப்பான். ஒருதினம் வயல் வழியாக வந்து கொண்டிருந்தபோது புறா ஒன்றைப் பார்த்தான். அதன் இறக்கையொன்று ஒடிந்து போயிருந்தது. அதனைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

வைத்தியருக்கு ஆள் அனுப்பினான். வந்தவர் ''யாருக்கு நோய்? எங்கே இருக்கிறார் நோயாளி?'' என்று கேட்டார்.

கூண்டில் விட்டிருந்த புறாவைக் கொண்டு வந்தான்.

''உனக்குப் பைத்தியமா?''

''இல்லை. இதற்கு வைத்தியம் செய்யுங்கள்'' என்றான் அவன்.

''செய்கிறேன். பத்துப் பவுன் தர முடியுமா?'' என்று கேட்டார் வைத்தியர்.

''தருகிறேன்'' என்றான். சொன்னபடியே வைத்தியம் செய்பவரிடம் பணத்தைக் கொடுத்தான். நீண்ட நாட்களாக வைத்தியம் செய்த பிறகு பறவை பிழைத்துக் கொண்டது.

இதே செல்வந்தரின் மகன் வயல் வழியாக வந்து கொண்டிருந்தான். பாம்பு ஒன்று அடிபட்டு மூர்ச்சித்துக் கிடந்தது. அதனை ஒரு கம்பிலே சுற்றி எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான். மீண்டும் வைத்தியரை அழைத்து வர ஆள் அனுப்பினான்.

இந்தத் தடவை நோயாளி மனிதனை எதிர்பார்த்தார். வைத்தியத்துக்குப் பாம்பு ஒன்று எதிரே இருந்தது.

''எனக்கு நூறு பவுன் தர முடியுமா?'' என்றார் வைத்தியர்.

''தருகிறேன். குணப்படுத்துங்கள்.''

வைத்தியர் பல நாட்கள் வந்து பாம்பின் காயத்தைக் குணப்படுத்தினார். பணக்காரன் பேசிய தொகையைக் கொடுத்தும் விட்டான். பாம்பு பிழைத்தது.

அந்த ஊருக்கு வெளிப்புறத்தில் ஒருவன் மீது கல்லை வீசிப் பலரும் அடித்துக் கொண்டிருந்தார்கள். அவன் திருடனும். பல இடத்தில் திருடியவனும். யாரையோ கொலைகூடச் செய்தவனும். எனவே மக்கள் கல்லெறிந்து குற்றுயிரும் கொலை உயிருமாகச் செய்து விட்டார்கள் அவனை. மயங்கிக் கிடந்த அவனைப் பார்த்ததும் பணக்காரனுக்கு இரக்கம் வந்தது.

அதே சமயம் அவன் தந்தையின் வாசகமும் நினைவுக்கு வந்தது. ''அப்பா சொன்னார் பறவை விலங்குகளுக்கு இரக்கப்படு. மனிதனுக்கு இரக்கம் காட்டாதே என்று. இது பெரிய தவறு. இவனை நாம் காப்பாற்றுவோம்'' என்று தீர்மானித்துப் புண்பட்ட மனிதனைத் தூக்கிச் சுமந்து கொண்டு வீட்டுக்கு வந்தான்.

வைத்தியர் வந்தார். இந்தச் சமயம் அவர் இருநூறு பவுன் கேட்டார். தருவதாக ஒப்புக் கொண்டான்.



வைத்தியர் வந்து அவன் புண்ணைக் குணப்படுத்தினார். சாகக் கிடந்த அவன் குணமாகி விட்டான். பேசிய பணத்தைக் கொடுத்தான் செல்வரின் மகன்.

திருடன் தனது நன்றியைச் சொன்னான்.

நோய் தீர்த்த நல்லவன், ''நண்பனே! எனக்கு மனைவி இல்லை, மக்கள் இல்லை. உற்றார் உறவினர் இல்லை. எனக்கு அண்ணன், தம்பி, தாய் தந்தை மாமன் மச்சான் எல்லாம் நீயே. என்னிடம் ஆறு பெட்டிகள் நிறையத் தங்கம் இருக்கிறது. அதற்கு நீயும் நானும் தான் சொந்தக்காரர்கள். நீ இறந்தால் நான் வைத்துக் கொள்வேன். நான் இறந்தால் முழுவதும் நீயே வைத்துக் கொள். இதுவே என் வேண்டுகோள்'' என்று திருடனிடம் சகோதரனைப்போல வணங்கிச் சொன்னான்.

ஒரு நாள் ராஜாவின் அரண்மனையிலிருந்த தங்கப் பாளங்கள் நிறைந்த ஒரு பெட்டி காணாமற் போய்விட்டது. ராஜா தண்டோராப் போடச் சொன்னார். ''யார் ஒரு பெட்டி தங்கத்தைக் கண்டுபிடிக்கிறார்களோ அவர்களுக்கு இந்த நாட்டு மந்திரி பதவி'' என்பதாக.

தண்டோரா தட்டப்பட்டது.

பிழைத்த மனிதன் யோசித்தான். ''இந்தத் திருட்டில் செல்வந்தனை மடக்கலாம். ஒரு பெட்டி தங்கம் போதும். மீதியுள்ள ஐந்து பெட்டிகளும் எனக்கு மிச்சம்'' என்று எண்ணியவன், அரசரின் முன்போய் நின்றான். தன்னைக் காத்தவனைக் குற்றவாளி என்று புகார் செய்தான்.

''நான் உண்மை சொல்லுகிறேன். தங்கள் அரண்மனையிலிருந்து களவு போன பெட்டியை நான் காட்ட முடியும்'' என்றான் திருடன்.

அவன் சொன்ன அடையாளப்படி வீரர்கள் செல்வந்தன் வீட்டுக்குப் போய்ப் பெட்டியை எடுத்து வந்தார்கள். அதனைத் திறந்து பார்க்கவில்லை அரசன். கோபம் கொண்ட மன்னன் பெட்டியைத் திருடிய கயவனைக் ''கொண்டு வாருங்கள்'' என்று கட்டளை யிட்டான்.



வயலில் வேலை பார்த்துவிட்டு வந்து கொண்டிருந்த செல்வன் மகனைப் பிடித்து வந்தார்கள் காவலாளிகள்.

''நான் என்ன தவறு செய்தேன்?'' என்று கேட்டான் மன்னரிடம்.

''நீ அரண்மனையிலிருந்து தங்கம் திருடினாய்'' என்றார் மன்னர்.

உடனே அவனுக்கு ஞானம் வந்தது.

''நமது 'சகோதரன்' நம்மைக் காட்டிக் கொடுத்திருக்கிறான். தந்தை சொன்னது எவ்வளவு பெரிய உண்மை. மனிதனுக்கு இரக்கம் காட்டாதே என்றார். அதன் பரிசு எனக்கு அவமானம். எனக்குத் தண்டனை'' என்று மனம் நொந்தான்.

இழுத்து வந்தவனைச் சிறைச்சாலையில் அடைக்கச் சொன்னார் அரசன்.

வீடு திரும்பாத எஜமானனை எண்ணிப் புறா வருந்தியது. பாம்பும் துடித்தது. இரண்டும் ஆலோசனை செய்தன. எஜமானரைத் தேடி வருவதாகச் சொல்லிப் புறா பறந்தது.

அரசன் தன் வாக்குப்படி மந்திரியாக அந்தக் கொலைகாரனை நியமனம் செய்தான்.

பறந்த புறா சிறைச்சாலைப் பக்கம் வந்தது. அங்கு அன்னம் தண்ணீர் இல்லாமல் கிடந்தான் செல்வன் மகன். தன் இறகைத் தண்ணீரில் நனைத்து மயங்கிக் கிடந்தவனின் நாவில் சொட்டுச் சொட்டாகக் கொண்டு வந்து விட்டது புறா. கடைசி முறையாகப் பாம்பையும் தூக்கிக் கொண்டு வந்தது.

புறாவும் பாம்பும் கூடி யோசனை செய்தன. பாம்பு தான் அரண்மனைக்குள் போய்ச் சில வேலைகள் செய்வதாகக் கூறிச் சென்றது.

ராஜாவுக்கு ஒரே மகள். அவள் கையைச் சுற்றிக் கொண்டு சீறியது பாம்பு, ஆனால் கடிக்கவில்லை. ராஜகுமாரி மயக்கமடைந்து கிடந்தாள்.

யாரும் கிட்டப் போக முடியவில்லை. ராஜா ''யாராவது பாம்பை வசப்படுத்தினால் இந்த ராஜ்யத்தைத் தந்து ராஜாவாக்குகிறேன்'' என்று கூறினான். தண்டோரா முழங்கியது.

சிறைக் காவலர்களிடம் தான் உதவுவதாகச் சொன்னான் செல்வன் மகன். இப்போது அவன் கைதியாயிற்றே.

சிறைச்சாலைக் கைதியைப் பார்த்து அரசர் நம்பவில்லை. ஆனால் அவனைக் கண்டதும் பாம்பு பயந்து ஓடியது.

ராஜாவுக்கு ஒரே மகிழ்ச்சி.

''அரசே! எனக்கு ராஜ்யம் வேண்டாம்; பொன் வேண்டாம்; பொருள் வேண்டாம்; விடுதலை தாருங்கள்'' என்றான் செல்வந்தன்.

''சரி, நீ எப்படிப் பாம்பை விடுவித்தாய்? அதனைச் சொல்'' என்றார் மன்னர்.

தன் தந்தையின் மரண காலத்திய அறிவுரை தொடங்கி நடந்தது அவ்வளவையும் சொல்லி முடித்தான்.


''அரசே! என் வீட்டிலிருந்த தங்கப் பெட்டியை நீங்கள் சோதனை செய்து பார்க்கவில்லை. அதனைத் திறந்து பாருங்கள். அது உங்களுடைய பெட்டி இல்லை. என் வீட்டுக்கு வாருங்கள். அதைப் போல் ஐந்து பெட்டி நிறையத் தங்கம் இருக்கிறது. ஒரு புறாவும் அங்கு இருக்கிறது. போய்ப் பாருங்கள்'' என்றான்.

அரசர் வந்து பார்த்தார். தமது அரண்மனைக்கு வந்த பெட்டி தம்முடையது இல்லை என்பதைக் கண்டார். செல்வன் வீட்டில் வேறு ஐந்து பெட்டிகள் இருப்பதையும் கண்டார். தம்மை வஞ்சித்த கொலைஞனை—திருடனை — புதிய மந்திரியைச் சிரச் சேதம் செய்ய உத்தர விட்டார் செல்வந்தர் மகனையே மந்திரியாக்கிக் கொண்டார்.

மூளைக்கு வேலை – விடைகள் :

1. மறதி மகாதேவன் யந்திரத்தின் கைப்பிடியை அம்புக் குறியிட்ட பக்கமாகத் திருப்பினால் அவர் சாப்பிடக்கூடிய தக்காளி சூப்பில் உப்பு உள்ள பாட்டில் கவிழ்ந்து தூவும்.

2. A, B காகிதத் துண்டுகளைக் கொண்டு முதல் படத்தில் உள்ளது போல ஒரு பெரிய கட்டத்தை அமைக்கலாம். A காகிதத் துண்டு நான்கை மட்டும் கொண்டு இரண்டாவது படத்தில் உள்ளபடி ஒரு கட்டத்தை அமைக்கலாம்.




3. பின்னுக்குப் போகும் வெற்றிபெறும் காட்சி. பலப் பரீட்சையைக் காணுவதற்காக விளையாடும் 'டக் ஆஃப் வார்' — கயிறு இழுப்புப் போட்டி விளையாட்டு.

4. முயல் குடும்பத்திலுள்ள குழந்தைகள் : நான்கு பெண் முயல் குட்டிகள், மூன்று ஆண் முயல் குட்டிகள்.



பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
பாலு, தெருவில் யாருடனும் சண்டை போடாதே. 'புதுசா வந்திருக்கிற பையன் சண்டைக்காரன்' என்று கெட்ட பெயர் வாங்கிக் காதே. என்ன தெரிந்ததா?
சரிம்மா....
கோந்திமூஞ்சிப் பயலே, அந்தப் பந்தை வச்சுக் கிட்டு என்னடா செய்யப்போறே?
ஆந்தை மூஞ்சி. நான் என்னவோ செய்யறேன். நீ உன் வேலை யைப் பாத்துக் கிட்டுப் போடா.
என்னோடு பந்து விளையாடப் பயலுக்குப் பயம். அது தான் ஐயா 'ஜகா' வாங்கறார்!
நான்..? உன்னோடு விளையாடப் பயப்படறேன்? வாஹ்வா! வரியா ஒண்டிக்கு ஒண்டி?
வா, வாத்யாரே வா! சீக்கிரம். நீ இன்னும் ஒரு கோல் கூடப் போடல்லே. நினைவிருக்கட் டும்.
கோ...ல்...ல்...!
இல்லே. அது கோல் இல்லே. பந்து போல்ஸ்க்கு மேலே போய் விட்டது.
அது கோல் தான்.
இல்லே, அது கோல் ஆகாது.
என்னை என்ன முட்டான்னு நெனச்சியா?
சந்தேகமில்லாம நீ முட்டாள், மட்டி, மடையன்!
என்ன சொன்னே? வெங்காய மூஞ்சிப் பயலே! பந்து விளையாடத் தெரியுமாடா உனக்கு?


வெங்காய மூஞ்சியா? இப்ப யாரு மூக்குத் தக்காளிப்பழமாகப் போகுதுன்னு பாரு.
ஏ...ஏ...! பசங்களா? நிறுத்துங்க நிறுத்துங்க.
சண்டை போட்டது போதும். ரெண்டு பேரும் அவங்க அவங்க வீட்டுக்குத் திரும்பிப் பாக்காம வெவ்வேறு திசையிலே போகணும். என்ன?
வீட்டில்.
மறுபடியும் கிட்டுவோட சண்டையா? இது ரொம்பக் கெட்ட குணம். உடனே போய் அவன்கிட்ட மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவனை நம் வீட்டுக்கு டிபன் சாப்பிட அழைத்துக்கொண்டு வரணும் போ.
எல்லாரோடும் ஒத்துமையாப் பழகணும். கிட்டு இல்லாமல் நீ வீட்டுக்குவரக் கூடாது, ஆமா.
சிறிது நேரத்தில்—
பா...லு...ஊ...ஊ...!
பாலு நான் என்ன சொல்லி அனுப்பினேன்? யாருடனும் சண்டை போடக்கூடாதுன்னு சொன்னேனில்லியா?
சொன்னது வாஸ்தவந்தான். கிட்டு இல்லாமல் வீட்டுக்கு வரக்கூடாதுன்னும் கண்டிஷன் போட்டே. அவனை டிபன் சாப்பிடலாம் வாடான்னேன். பய கொஞ்சம் முறைச்சான். அதுக்காக அவனை லேசாக் 'கவனிச்ச' பிறகு இப்படித்தான் அழைத்துவர முடிஞ்சது. டிபன் ரெடியா?



என்ன விநோதம் பாரு!

□ தென் ஆப்பிரிக்காவில் வாழுகிறது இந்தக் குரங்கு. 'ஹௌளர் மங்கி' — அதாவது ஊளையிடும் குரங்கு என்று பெயர். உறுதியான தாடைகளும் பலமான பற்களுமுடைய பயங்கரமான குரங்கு. இது கடித்தால் அதன் பிடியிலிருந்து விடுபடுவது கடினம். இதன் ஊளைச் சத்தம் கேட்பவரை பீதிகொள்ளச் செய்வதாக இருக்கும்.

இத்தனை இருந்தாலும் இந்தக் குரங்கு அமைதியான குணம் படைத்தது. பார்வைக்குப் பயங்கரமானாலும் ஆசைக் கணவனாக, அன்புத் தந்தையாக வாழும் இயல்புடையது. இதன் ஆகாரமோ தாவர மொட்டுக்களும் தளிர் இலைகளும்தான். வியப்பாக இல்லை?



□ மேலேயுள்ளது போன்ற மான்கள் கிழக்கு ஆப்பிரிக்காவில் வாழுகின்றன. இவைகளுக்கு ஜெரனக் (Gerenuk) என்று பெயர். சிறிய மான் வகைதான். ஆனால் காலும் கழுத்தும் நீளமானவை. ஆபத்துக் காலத்தில் இவை ஓடும்போது கழுத்தை நிமிர்த்தாமல் படுக்கைக் கோடு போல் முன்னால் நீட்டிக்கொண்டு ஓடும். அப்போது உயரமாக வளர்ந்துள்ள கானகத்துப் புல்லில் இதன் உருவம் மறைந்து விடும். பசிக்கு உணவு தேடும்போது படத்தில் உள்ளதுபோல நிமிர்ந்து நின்று மரங்களிலுள்ள தளிர்களைச் சுவைக்கும். பூமியிலிருந்து ஆறு அடி உயரம் வரை இப்படி இதனால் எம்பி நிற்க முடியும்.

□ உலகிலேயே மிகப் பெரிய வண்டு இதுதான். இதன் பெயர் 'ஹெர்குலிஸ் பீட்டில்'. மேற்கிந்தியத் தீவுகளிலும் தென் அமெரிக்காவின் காடுகளிலும் இவ்வகை வண்டுகள் காணப்படுகின்றன. இதன் நீளம் ஆறு அங்குலத்துக்கும் அதிகம். இதன் கொம்பு போன்ற முன் பாகம் மட்டும் நான்கு அங்குல நீளம் இருக்கும். மேலே உள்ள கொம்பு சற்றே கீழ் நோக்கி வளைந்தும், தலையிலிருந்து வரும் கீழுள்ள பாகம் சற்றே மேல் நோக்கி வளைந்தும் பார்ப்பதற்குப் பெரும் தாடைகளைப் போலத் தோற்றமளிக்கும். சில வேளைகளில் ஆண் வண்டு இந்த உறுப்பினுள் பெண் வண்டை இடுக்கித் தூக்கிச் செல்லும் என்று கருதப்படுகிறது. இவ்வினத்தில் பெண் வண்டுகள் அழகற்றவை. ஆண் வண்டுகள்தாம் அழகானவை. இதன் இறக்கை ஓடு ஆழ்ந்த ஆலிவ் வண்ணத்தில் காணப்படும். தலையும் மார்பும் நல்ல கறுப்பாக இருக்கும். மேல் பக்கமுள்ள நீண்ட கொம்பு அடர்த்தியான பொன் வண்ண ரோமங்களால் மூடப்பட்டிருக்கும். பகலெல்லாம் மறைந்திருந்து இரவு வேளைகளில் உணவு தேடவும் உல்லாசமாகத் தன் ஜோடியோடு உலா வரவும் இது பறந்து திரியும். தனக்குத் துணைவி தேடிக் கொள்ளும் போது மற்ற ஆண் வண்டுகளுடன் போராட இதன் முன் கொம்புகள் பயன்படுகின்றன.



ஓ! அப்படியா?



1. பயிர் செய்யப்படும் பழ வகைகளில் மிக மிகப் பழைமையானது எது தெரியுமா?.. திராட்சைப் பழம்தானும். நம் புராண இதிகாசங்களிலும் திராட்சைப் பழம் பற்றி நிறைய வருகிறது. மேலை நாட்டு இதிகாசங்களிலும் — 'ஒயின்' என்று கூறப்படும் திராட்சைப் பானம் வருகிறது. ஆகவே, திராட்சை மிக மிகப் பழைய காலத்துப் பழம் என்பதில் சந்தேகம் இல்லை. உணவும் பானமும் ஒருங்கே இணைந்த ஒரே பழம் திராட்சைதான்.


□

2. எகிப்தில் உள்ள மெம்பிஸ் என்ற இடத்தில் ஒரு பிரமிட் இருக்கிறது. இதற்கு 'ஸ்டெப் பிரமிட்' என்று பெயர். இதைக் கட்டிச் சுமார் ஐயாயிரம் ஆண்டுகள் இருக்கலாம் என்று மதிப்பிடுகிறார்கள், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள். உலகிலேயே மிக மிகப் பழைமையான கட்டடம் இதுதான் என்று நம்பப்படுகிறது. எகிப்தில் இன்னும் பல பிரமிட்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் விடப் புராதனமானது இந்தப் பிரமிட் என்கிறார் ஆராய்ச்சியாளர்.



3. விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, உடலிலுள்ள தசைகளில் மிக அதிகமாக இயங்கக் கூடியது கண்தசைகள்தாம். சாதாரணமாகப் படிக்கும், பார்க்கும் ஒரு மனிதனின் கண் தசைகள் ஒரு நாளைக்கு 1,00,000 தடவைகள் இயங்குகின்றனவாம். சாதாரண தசைநார்கள் எத்தனை உறுதியாக இருக்க வேண்டுமோ அதைப் போல் நூறு மடங்கு உறுதி வாய்ந்தவை கண்ணிலுள்ள தசைநார்கள்.





4. 'நெருப்புக் கோழிகள் விரோதிகளிடமிருந்து தப்பிக்கத் தன் தலையை மணலுக்குள் புதைத்துக் கொள்ளும். ஏனென்றால் அதனால் பார்க்க முடியாதாகையால் விரோதியும் தன்னைப் பார்க்க மாட்டான் என்று கருதுகிறது.' இப்படியொரு நம்பிக்கை. ஆனால் ஆராய்ச்சியாளர்கள் இது தவறு என்று கூறுகிறார்கள். நெருப்புக் கோழி குடிநீரைத் தேடுவதற்காகவே மணலுக்குள் தலையை நுழைத்துக் கொள்ளுகிறதாம்! விரோதிகளைக் கண்டு பயந்து அல்லவாம்.



5. 'பான் அமெரிக்கன் ஹைவே' என்ற நெடுஞ்சாலை அலாஸ்கா மாகாணத்தின் ஃபேர்பாங்க்ஸ் நகரிலிருந்து தொடங்கித் தென் அமெரிக்காவிலுள்ள அர்ஜெண்டினா நாட்டின் ப்யூனஸ் ஐரஸ் வரை செல்கிறது. மொத்தம் 18,877 மைல்கள். வட தென் அமெரிக்க மாகாணங்களின் எல்லாத் தலைநகரங்களையும் இணைக்கிறது இந்த நெடுஞ்சாலை அமைப்பு.... 1923ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இத்திட்டம்.

□

6. 'ஞாபகசக்தி யானைக்கு மிக அதிகம். எதையும் மறந்து விடாது' என்று ஒரு நம்பிக்கை நிலவுகிறது. ஆனால் ஆராய்ச்சியாளர்கள் குதிரை, பசு, நாய் இவைகளைவிட யானைக்கு ஞாபக சக்தி குறைவு என்கிறார்கள். விலங்கினங்களில் ஞாபக சக்தி அதிகம் உள்ள மிருகம் குரங்குதானாம். ஆராய்ச்சியாளர்கள் சொன்னால் சரியாகத்தானே இருக்கும்? ஆனால், யானையைப் பற்றி நம்மிடையே வளர்ந்து விட்ட நம்பிக்கை மாறப் போவதில்லை!

நன்றி: யு. எஸ். ஐ. எஸ்.



'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்


தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...
நீயும் ஏன் திருப்பி அடிக்க வில்லை? நீ தற்காப்பு செய்து கொள்ளக் கற்க வேண்டும்.
அல்லது அடியை மணிக்கட்டால் தடுக்கலாம்.
முன்கையால் அல்லது தோளால் தாக்குதலைத் தாங்கிக்கொள்ளலாம்.
புரிந்ததா ராஜு. குத்துச் சண்டையில் இது முதல் பாடம்— தற்காப்பு செய்துகொள்ளக் கற்பது.
அடடே, நேரமாகி விட்டது! படுக்கப் போ ராஜு. பிரஷ்கொண்டு பற்களைத் துலக்கினாயா?
ஓ! தினந்தோறும் காலையில் துலக்குகிறேனே, அப்பா!
அது போதாது ராஜு. பற்களைச் சிதைக்கும் உணவுத் துகள்களை நீக்கும் பொருட்டு, இரவும் பகலும் பற்களைத் துலக்க வேண்டும். விரல் கொண்டு அதோடு ஈறுகளையும் தேய்த்துக் கொடுக்க வேண்டும்—அவற்றை ஆரோக்கியமாகவும் உறுதியாகவும் வைத்திருக்க இதுவே வழி.
வா, நாமிருவரும் போர்ஹன்ஸ் பற்பசையால் பல் துலக்குவோம்.
சரி, அப்பா.
Forhan's
FOR THE GUMS
போர்ஹன்ஸ்
பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்ட பற்பசை.

SO F-203 TM

REGISTERED NO. M. 9040